| தேர்வு எண் | | | | | | |
|---|---|---|---|---|---|---|

**SSLC காலாண்டுப் பொதுத் தேர்வு 2024 - 2025**

நேரம் : 3.00 மணி **சமூக அறிவியல்** மொத்த மதிப்பெண்கள் : 100

பகுதி 1 – ( மதிப்பெண்கள் : 14 )

# விடை குறிப்புகள்

1. அ) ஜெர்மனி, ஆஸ்திரிய-ஹங்கேரி, உதுமானியர்
2. ஆ) லத்தீன் அமெரிக்கா
3. இ) ஹிரோஷிமா
4. ஈ) 1991
5. அ) தயானந்த சரஸ்வதி
6. ஈ) தமிழ்நாடு மற்றும் ஆந்திரப்பிரதேசம்
7. இ) பஞ்சாப்
8. இ) சணல்
9. ஆ) சூரியன்
10. ஈ) பெட்ரோலியம்
11. இ) அரசியலமைப்புக்குட்பட்டு தீர்வு காணும் உரிமை
12. இ) 25 வயது
13. ஆ) தலைமை இயக்குநர்
14. இ) தமிழ்நாடு

## பகுதி - II

10 × 2 = 20

15. மூவர் கூட்டு நாடுகளின் பெயர்களைக் குறிப்பிடுக.
    - ❖ இங்கிலாந்து
    - ❖ பிரான்ஸ்
    - ❖ ரஷ்யா
16. முசோலினியின் ரோமாபுரி நோக்கிய அணிவகுப்பின் விளைவுகள் யாவை?
    - ❖ 1922 ஆண்டு முசோலினி தலைமையில் பாசிஸ்டுகள் ரோம் நகரை நோக்கி அணிவகுத்து சென்று தங்கள் பலத்தை காட்டினர்.
    - ❖ இதனை அறிந்த இமானுவேல் ஆட்சி அமைக்க முசோலினியை அழைத்தார்.
17. பிரெட்டன் உட்ஸ் இரட்டையர்களின் பெயர்களைக் குறிப்பிடுக.
    - ❖ உலக வங்கி
    - ❖ பன்னாட்டு நிதி அமைப்பு
18. மார்ஷல் திட்டம் என்றால் என்ன?
    - ❖ மேற்கு ஐரோப்பிய நாடுகளை தன் செல்வாக்குக்குள் வைத்துக்கொள்ள அமெரிக்க நாடு மார்ஷல் திட்டத்தை உருவாக்கியது.
    - ❖ இரண்டாம் உலகப்போர் பாதிப்பில் இருந்து மீண்டுவர அமெரிக்க பண உதவி செய்யும்.
    - ❖ அமெர்க்க நாட்டின் செயலர் மார்ஷல் இத்திட்டத்தை அறிமுகம் செய்தார்.
19. இராமலிங்க அடிகளின் சீர்திருத்தங்கள் குறித்து சிறுகுறிப்பு வரைக.
    - ❖ அனைத்து உயிர்களிடத்தில் அன்பு இரக்கம் காட்டினார்.
    - ❖ இதை அவர் ஜீவகாருண்யம் என்றார்.
    - ❖ அனைத்து மக்களுக்குமான இலவச உணவகத்தை வடலூரில் நிறுவினார்.
    - ❖ 1865 ஆண்டு சமரச வேத சன்மார்க்க சங்கம் என்னும் அமைப்பை நிறுவினார்.
20. இந்தியாவின் அண்டை நாடுகளின் பெயர்களைக் கூறுக
    - ❖ தெற்கு – இலங்கை
    - ❖ கிழக்கு – வங்காளதேசம், மியன்மார்

www.Padasalai.Net

- வடக்கு – சீனா ,நேபாளம் ,பூடான்
- மேற்கு – பாகிஸ்தான் ,ஆப்கானிஸ்தான்

21. இந்தியாவின் காலநிலையை பாதிக்கும் காரணிகளை பட்டியலிடுக.

- அட்சங்கள்
- கடலிருந்து அமைந்துள்ள தொலைவு
- கடல் மட்டத்தில் இருந்து உயரம்
- பருவக்காற்று
- நிலத்தோற்றம்
- ஜெட் காற்றுகள்

22. கரிசல் மண்ணின் ஏதேனும் இரண்டு பண்புகளை எழுதுக.

- ஈரமாக இருக்கும் போது சேறாகவும் ,ஈரப்பதத்தை நீண்ட நேரம் தக்கவைத்துக் கொள்ளும்.
- டைட்டானியம் மற்றும் இரும்பு தாதுக்களால் கருப்பு நிறமாக உள்ளது.

23. மாங்கனீசின் பயன்களைக் குறிப்பிடுக.

- வெளுக்கும் தூள், பூச்சிக்கொல்லிகள், வண்ணப்பூச்சிகள் மற்றும் மின்கலன்கள் தயாரிக்க மாங்கனீசு பயன்படுகிறது.
- எடை குறைவானது ஆனால் வலிமை மிக்க பொருள்களை உற்பத்தி செய்யப் பயன்படுகிறது.

24. பன்னாட்டு வணிகம் - வரையறு.

- இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நாடுகளுக்கு இடையே நடைபெறும் வணிகம் பன்னாட்டு வணிகம் என அழைக்கப்படுகிறது.
- இரு கூறுகள் – ஏற்றுமதி, இறக்குமதி

25. இந்தியாவின் செம்மொழிகள் யாவை?

- ஆறு மொழிகள் செம்மொழி தகுதியை பெற்றுள்ளன.
- தமிழ்
- சமஸ்கிருதம்
- தெலுங்கு
- கன்னடம்
- மலையாளம்
- ஒடியா

26. நிதி மசோதா குறிப்பு வரைக.

- அரசின் திட்டங்கள் அதற்கான ஒதுக்கீடுகள் , வருமான வரியில் மாற்றங்கள் , புதிய திட்டங்களுக்கான ஒதுக்கீடுகள், புதிய அறிவிப்புகள் கொண்டு வருவதற்கான மசோதா நிதி மசோதா எனப்படும்.
- நிதிமசோதாவினை திருத்தம் செய்யவோ அல்லது நிராகரிக்கவோ மாநிலங்களவைக்கு அதிகாரம் இல்லை.

27. தலா வருமானம் என்றால் என்ன?

- மக்களின் வாழ்க்கைத் தரத்தை உணர்த்தும் ஒரு கருவியாகும்.
- நாட்டு வருமானத்தை மக்கள் தொகையால் வகுப்பதன் மூலம் தலா வருமானம் பெறப்படுகிறது.

- தனிநபர் வருமானம் = நாட்டு வருமானம் / மக்கள் தொகை

28. FAO வின்படி உணவு பாதுகாப்பை வரையறு.

- " எல்லா மக்களும் ,எல்லா நேரங்களிலும் , போதுமான பாதுகாப்பான மற்றும் சத்தான உணவுக்கான உடல், சமூக மற்றும் பொருளாதார அணுகுமுறையைக் கொண்டிருக்கும் போது ,அவர்களின் உணவுத் தேவைகளையும் , சுறுசுறுப்பான மற்றும் ஆரோக்கியமான வாழ்க்கைக்கான உணவு விருப்பங்களையும் பூர்த்தி செய்வதில் உணவுப் பாதுகாப்பு இருக்கிறது.

பகுதி - III

குறிப்பு : எவையேனும் 10 வினாக்களுக்கு விரிவான விடையளிக்கவும் . 42 வது வினாவிற்கு கட்டாயமாக விடையளிக்க வேண்டும் 10×5=50

29. கோடிட்ட இடங்களை நிரப்புக.

i. 1925
ii. ரோம் - பெர்லின் - டோக்கியோ
iii. 1872
iv. துணைக் குடியரசுத் தலைவர்
v. வேளாண்மை

30. பன்னாட்டுச் சங்கத்தின் பணிகளை மதிப்பிடுக.

- 1920-1925 ஆகிய ஆண்டுகளிடையே பன்னாட்டுச் சங்கம் பலசிக்கல்களைத் தீர்த்துவைக்க அழைக்கப்பட்டது.
- மூன்று பிரச்சனைகளைத் தீர்த்துவைப்பதில் சங்கம் வெற்றிபெற்றது.
- 1920 இல் ஆலேண்டுதீவுகள் யாருக்குச் சொந்தம் என்பதில் பின்லாந்திற்கும் சுவீடனுக்குமிடையே பிரச்சனைஏற்பட்டது.
- பன்னாட்டுச் சங்கம் அத்தீவுகள் பின்லாந்திற்கே உரியது எனத் தீர்ப்பளித்தது.
- போலந்திற்கும் ஜெர்மனிக்கு இடையே மேலைசைலேஷியா பகுதியில் எல்லைப்பிரச்சனை ஏற்பட்டு, பிரச்சனையைத் தீர்த்துவைக்கச் சங்கம் அழைக்கப்பட்ட போது அப்பிரச்சனையைச் சங்கம் வெற்றிகரமாகத்தீர்த்து வைத்தது.
- 1925 இல் மூன்றாவது பிரச்சனை கிரீஸ், பல்கேரியா நாடுகளிடையே ஏற்பட்டதாகும்.
- கிரீஸ்பல்கேரியாவின் மீது படையெடுத்த போது பன்னாட்டுச் சங்கம் போர்நிறுத்தம் செய்ய உத்தரவிட்டது.
- விசாரணைக்குப்பின் சங்கம் கிரீஸின் மீது குற்றஞ்சாட்டி, கிரீஸ்போர் இழப்பீடு வழங்கவேண்டுமெனத் தீர்மானித்தது.
- ஆகவே 1925 இல்லொக்கர்னோ உடன்படிக்கை கையெழுத்தாகின்றவரை பன்னாட்டுச் சங்கம் வெற்றிகரமாகவே செயலாற்றியது.

31. இரண்டாம் உலகப்போரின் விளைவுகளை ஆய்வு செய்க

<u>உலகம் இரு அணிகளாகப் பிரித்தல்</u>:

- வல்லரசுகள் தலைமையிலான அணிகள் இரு துருவங்களாக பிரிந்தன.
- கம்யூனிச எதிர்ப்புக் கருத்துக்கு அமெரிக்கா தலைமை தாங்கியது,
- மற்றோர் அணிக்கு ரஷ்யா தலைமை தாங்கியது.
- கம்யூனிச நாடுகள், கம்யூனிச அல்லாத நாடுகள் என ஐரோப்பா இரண்டாக பிரிந்தன.

<u>அணு ஆயுதப் பரவல்</u>:

- அமெரிக்காவும் ,ரஷ்யாவும் அணு அயுதங்களை அதிகரிக்கும் போட்டியில் இறங்கின.

- பல நாடுகளில் இராணுவத்திற்கான செலவினம் உச்சத்தை எட்டின.

**பன்னாட்டு முகமைகள்:**

- உலக வங்கி
- பன்னாட்டு நிதியம் போன்ற அமைப்புகள் உருவாக்கப்பட்டன.

32. **அ) வேறுபடுத்துக மற்றும் காரணம் கண்டறிக.**

i. மேற்கு கடற்கரைச் சமவெளி மற்றும் கிழக்கு கடற்கரை சமவெளி

| மேற்கு கடற்கரை சமவெளி | கிழக்கு கடற்கரை சமவெளி |
|---|---|
| மேற்கில் உள்ளது | கிழக்கில் உள்ளது |
| ரானா ஆப் கட்ச் முதல் கன்னியாகுமரி வரை பரவியுள்ளது. | மேற்கு வங்கம் முதல் கன்னியாகுமரி வரை பரவியுள்ளது. |
| முக்கியமான ஏரி வேம்பநாடு. | முக்கியமான ஏரி சிலிக்கா ,பழவேற்காடு ஏரி. |

ii. உலோகம் மற்றும் அலோக கனிமங்கள்

| உலோக கனிமங்கள் | அலோக கனிமங்கள் |
|---|---|
| ஒன்றுஅல்லதுஅதற்குமேற்பட்டஉலோகங்களைக் கொண்டிருக்கும். | இவ்வகைக்கனிமங்களில்உலோகத்தன்மைஇருப்பதில்லை |
| அரிதாகவும்இயற்கையானஅடர்ந்ததாதுபடிவங்களாகவும் காணப்படுகின்றன, | அரிதாகவும்இயற்கையானஅடர்ந்ததாதுபடிவங்களாகவும்காணப்படுவதில்லை. |
| எ.கா: இரும்பு, தாமிரம், | எ.கா:மைக்கா,சுண்ணாம்பு |

**ஆ) காரணம் கூறுக**: வேளாண்மை இந்தியாவின் முதுகெலும்பு

- வேளாண்மை மூலம் 50 சதவீதம் வேலைவாய்ப்பை வழங்குகிறது.
- 25 சதவீதம் நாட்டிற்கு வருமானம் அளிக்கிறது.
- இந்தியாவின் முதன்மைத்தொழில் வேளாண்மை ஆகும்.

33. சீனாவை ஒரு பொதுவுடைமை நாடாக்க மா சே துங்கின் பங்களிப்பை அளவிடு.

**விவசாயிகளை வழி நடத்திய மாவோ:**

- மாவோ விவசாயிகளை ஒருங்கிணைக்க முயற்சி செய்தார்.
- கோமிங்டங் கட்சி மீது கடுமையான கட்டுப்பாடு விதிக்கப்பட்டது.
- மாவோ தலைமையில் 100 கம்யூனிஸ்டுகள் ஏழு ஆண்டுகள் காடுகளில் பதுங்கி இருந்தனர்.
- அக்காட்டுப் பகுதியில் மாவோவின் படை பெருகிக் கொண்டே சென்றது.

**1934 இல் நீண்ட பயணம்:**

- 1934 ஆண்டு 1,00,000 பொதுவுடைமை இராணுவ வீரர்களுடன் மாவோ தொடங்கிய பயணம்.
- அப்பயணம் ஒரு சகாப்தமாக மாறியது.
- 1 இலட்சம் பேரில் 20,000 பேர் மட்டும் 6000 மைல்கள் கடந்து ஷேனிப் பகுதியை அடைந்தனர்

**மா சே துங்கின் தலைமையில் சீனா:**

- 1949 ஆண்டு செப்டம்பர் மாதம் மக்கள் அரசியல் கலந்தாய்வு மாநாடு பீகிங் நகரில் கூடியது.
- இம்மாட்டில் 650 பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.
- மா சே துங் தலைமையில் நடுவண் ஆட்சிக்குழுவை தேர்ந்தெடுத்தது.
- இக்குழு 5 ஆண்டுகள் சீனாவை ஆட்சி செய்தது.

- மா சே துங் சீனாவை பொதுவுடைமை நாடாக்கி உலகையே திரும்பிப் பார்க்க வைத்தார் .

34. இமயமலையின் உட்பிரிவுகளையும் அதன் முக்கியத்துவம் பற்றி விவரி.

**இமயமலை மூன்று உட்பிரிவுகளாக பிரிக்கப்படுகிறது**

- மேற்கு இமயமலைகள்
- இமயமலை கள்
- கிழக்கு இமயமலைகள்

**இமயமலையின் முக்கியத்துவம்** :

- தென்மேற்கு பருவக்காற்றை தடுத்து வடஇந்தி பகுதிக்குக் கனமழையைக் கொடுக்கிறது
- இந்திய துணைக் கண்டத்திற்கு இயற்கை அரணாக அமைந்துள்ளது.
- வற்றாத நதிகளின் பிறப்பிடமாக உள்ளது. எ.கா – சிந்து ,கங்கை பிரம்மபுத்திரா மற்றும் பிற ஆறுகள் .
- இயற்கை அழகின் காரணமாக வடக்கு மலைகள் சுற்றுலா பயணிகளின் சொர்க்கமாகத் திகழ்கிறது.
- மத்திய ஆசியாவிலிருந்து வீசும் கடும் குளிர் காற்றை தடுத்து இந்தியாவை குளிரிலிருந்து பாதுகாக்கிறது.
- இமயமலை பல்லுயிர் மண்டலத்திற்கு பெயர் பெற்றது.

35. தென்மேற்கு பருவக் காற்று குறித்து எழுதுக.

- தென்மேற்கு பருவக்காற்று தொடங்குவதற்கு முன் வட இந்தியாவின் வெப்பநிலையானது 46.C வரை உயர்கிறது.
- இப்பருவக்காற்றின் இடி மாற்றும் மின்னலுடன் கூடிய துவக்கம் **பருவமழை வெடிப்பு** எனப்படுகிறது.
- இக்காற்று இந்தியாவின் தென்முனையை அடையும் போது இரண்டு கிளைகளாக பிரிகிறது. அவை 1. அரபிக்கடல் கிளை 2. வங்காள விரிகுடா கிளை

**அரபிக் கடல் கிளை** :

- மேற்கு தொடர்ச்சி மலையின் மேற்குச் சரிவுகளில் மோதி பலத்த மழைப் பொழிவை தருகிறது.
- வட இந்தியா முழுவதும் கனமழையை கொடுக்கிறது.
- ஆரவல்லி மலைத் தொடர் திசைக்கு இணையாக அமைந்துள்ளதால் இராஜஸ்தான் மற்றும் வட இந்தியாவின் மேற்கு பகுதிக்கு மழைப் பொழிவை தருவதில்லை.

**வங்காள விரிகுடா கிளை** :

- காசி மற்றும் ஜெயந்தியா குன்றுகளால் தடுக்கப்பட்டு மேகாலயாவில் உள்ள மௌசின்ராம் பகுதிக்கு கனமழை கொடுக்கிறது.
- வடகிழக்கு இந்தியா மற்றும் மியான்மரை நோக்கி வீசுகிறது.
- 75 % மழைப்பொழிவை இப்பருவக்காற்று காலத்தில் கிடைக்கிறது.

36. இந்தியாவில் உள்ள பருத்தி நெசவாலைகளின் பரவல் பற்றி எழுதுக.

- நெசவாலைகள் என்பது பருத்தி, சணல், கம்பளி, பட்டு மற்றும் செயற்கை இழை ஆகும்..
- இந்தியா இத்துறையில் உலகில் இரண்டாம் இடத்தில் உள்ளது.
- கிராமப்புற மக்களுக்கு அதிக வேலைவாய்ப்பை அளிக்கிறது.
- பருத்தி ஆலைகள் செறிந்து காணப்படுவதால் மும்பை இந்தியாவின் மான்செஸ்டர் என அழைக்கப்படுகிறது.
- கரிசல் மண் , ஈரப்பத காலநிலை , மும்பைத் துறைமுகம் , சந்தை ஆகிய வசதிகள் மகாராஷ்டிரம் மாநிலத்தில் காணப்படுகிறது.

- ❖ மேற்கு வங்காளத்தில் உள்ள ஹூக்ளி ஆற்றங்கரை.
- ❖ பட்ஜ்-பட்ஜ், ஹவுரா, டிட்டகார் முதன்மை சணல் உற்பத்தி மையங்கள் ஆகும்.
- ❖ ஈரோடு, திருப்பூர், கரூர். சென்னை, திருநெல்வேலி, மதுரை, தூத்துக்குடி மற்றும் சேலம் ஆகிய மாவட்டங்களில் தமிழ்நாட்டின் நெசவாலை நகரங்கள் ஆகும்.

37. முதலமைச்சரின் அதிகாரங்கள் மற்றும் பணிகளை விவரி.

- ❖ அமைச்சர்களுக்கு துறைகளை ஒதுக்கீடு செய்கிறார்.
- ❖ தனது அமைச்சரவையை மாற்றியமைக்கிறார்.
- ❖ அமைச்சரவைக் கூட்டத்தைத் தலைமை ஏற்று நடத்தி முடிவுகளை எடுக்கிறார்.
- ❖ சட்டமன்றத்தில் அரசின் கொள்கைகளை அறிவிக்கிறார்.
- ❖ சட்டமன்றத்தில் மசோதாக்களை அறிமுகப்படுத்துகிறார்.
- ❖ எந்த நேரத்திலும் சட்டமன்றத்தைக் கலைக்க ஆளுநருக்குப் பரிந்துரை செய்கிறார்.
- ❖ மாநிலத்தின் தலைவராக பல்வேறுபட்ட மக்களின் தேவைகளை உற்றுநோக்குகிறார்.
- ❖ ஆளுநருக்கு அமைச்சருக்கு பாலவமாக செயல்படுகிறார்.

38. இந்திய அரசியலமைப்பின் சிறப்புக் கூறுகளை விளக்குக.

- ❖ உலகில் உள்ள எழுதப்பட்ட, அனைத்து அரசியலமைப்புகளை விட மிகவும் நீளமானது.
- ❖ இது நெகிழும் தன்மை கொண்டதாகவும் உள்ளது.
- ❖ இது நெகிதாத் தன்மை கொண்டதாகவும் உள்ளது.
- ❖ இது கூட்டாட்சி முறை அரசாங்கத்தை ஏற்படுத்துகிறது.
- ❖ இந்தியாவை சமயச்சார்பற்ற நாடாக்குகிறது.
- ❖ சுதந்திரமான நீதித்துறையை வழங்குகிறது.
- ❖ உலகளாவிய வயது வந்தோர்க்கு வாக்குரிமையை வழங்குகிறது

39. உலகமயமாக்கலின் சவால்களை எழுதுக.

- ❖ இது உலகளாவிய சமத்துவமின்மைக்கு வழிவகுக்கிறது.
- ❖ உலகமயமாக்கல் சுற்றுச்சூழல் பாதிப்பை ஏற்படுத்துகிறது.
- ❖ உலகமயமாக்கலில் நன்மைகள் அனைத்தும் நாடுகளுக்கும் தானாக கிடைப்பதில்லை.
- ❖ குழந்தை தொழிலாளர் முறை மற்றும் அடிமைத்தனம் அதிகரித்துள்ளது.
- ❖ மக்கள் அதிக துரித உணவுகளை உட்கொள்கிறார்கள்
- ❖ இதனால் உடல்நலக்குறைவு மற்றும் நோய் பரவுதலுக்கு வழிவகுக்கிறது.

40. GDP ஐ கணக்கிடும் முறைகள் யாவை? அவைகளை விவரி.

<u>**மொத்த உள்நாட்டு உற்பத்தின் கணக்கீட்டு முறைகள்**</u>:

1.செலவின முறை

2. வருமான முறை

3.மதிப்பு கூட்டு முறை

<u>**செலவின முறை:**</u>

- ❖ மொத்த உள்நாட்டு உற்பத்தியை ஒரு குறிப்பிட்ட காலத்தில் ஒரு நாட்டில் உற்பத்தி செய்த அனைத்து இறுதிப் பண்ட பணிகளுக்கு மேற்கொள்ளும் செலவுகளின் கூட்டுத்தொகையாகும்.

<u>**வருமான முறை:**</u>

- ❖ பண்டங்கள் மற்றும் பணிகளை உற்பத்தி செய்வதில் ஈடுபட்டுள்ள ஆண்கள் மற்றும் பெண்களின் வருமானத்தை கணக்கிட்டு மொத்த உள்நாட்டு உற்பத்தியை இந்த முறை கூறுகிறது.

**மதிப்பு கூட்டு முறை:**

- ஒவ்வொரு இடைநிலைப் பண்டத்தின் மதிப்பை கூட்டினால், இறுதிப் பண்டத்தின் மதிப்பை அளவிடலாம்.
- எ.கா – டீ தூள் + பால் + சர்க்கரை = தேநீர்

41. 1920 முதல் 1950 வரையிலான ஐந்து முக்கிய உலக நிகழ்வுகளை காலக்கோட்டில் எழுதவும்.

- 1920 - பன்னாட்டுச் சங்கம் தோற்றம்
- 1922 - முசோலினி ரோமாபுரி அணிவகுப்பு
- 1927 - வியட்நாம் தேசியக்கட்சி உதயம்
- 1929 - பொருளாதாரப் பெருமந்தம்
- 1933 - ஹிட்லர் சான்சிலர் ஆதல்
- 1934 - நீண்ட பயணம்
- 1938 - மியுனிச் உடன்படிக்கை
- 1939 - இரண்டாம் உலப்போர் தொடக்கம்
- 1940 - பிரிட்டன் போர்
- 1941 - முத்து துறைமுக நிகழ்வு
- 1942 - ஸ்டாலின் கிரேடு போர்
- 1945 - இரண்டாம் உலப்போர் முடிவு

42. உலக வரைபடத்தில் கீழக்கண்ட இடங்களை குறிக்கவும்.
i) ஜப்பான் ii) மாஸ்கோ iii) ஹவாய் தீவு iv) இத்தாலி v) துருக்கி

பகுதி - IV

**குறிப்பு : இரு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்**

2×8=16

43. அ) முதல் உலகப்போருக்கான முக்கியக் காரணங்களை விவாதி.

**வன்முறை சார்ந்த தேசியம்:**

- எனது நாடு சரியோ தவறோ நான் அதை ஆதரிப்பேன் என்ற மனபாங்கு வளர்ந்தது.
- இங்கிலாந்து – ஆரவாரமான நாட்டுப்பற்று.
- பிரான்ஸ் – வெறிகொண்ட நாட்டுப்பற்று.
- ஜெர்மனி – ஜெர்மனி கலாச்சாரம் மிக உயர்வாக நினைப்பது.

**பால்கன் போர்கள்:**

- துருக்கி வலிமையற்று இருந்ததால் பால்கன் நாடுகள் அதன் கட்டுப்பாட்டில் இருந்து விலகியது.
- 1912 ஆண்டு பால்கன் கழகம் எனும் அமைப்பு உருவாக்கப்பட்டது.
- பால்கன் நாடுகள் 1912 ஆண்டு முதல் பால்கன் போரில் துருக்கியை தோற்கடித்தன.
- 1913 ஆண்டு இலண்டன் உடன்படிக்கையின் படி அல்பேனியா எனும் புதிய நாடு உருவாக்கப்பட்டது.

**பிரான்ஸ் ஜெர்மனியோடு கொண்ட பகை:**

- பிரான்சும் ஜெர்மனியும் பழைய பகைவர்கள்
- 1871 ஆண்டு போரின் மூலம் பிரான்ஸ் அல்சேஸ் மற்றும் லோரைன் பகுதிகளை ஜெர்மனியிடம் இழக்க நேரிட்டது.

www.Padasalai.Net

- ❖ மொராக்கோ விவகாரத்தில் ஜெர்மனிக்கும் பிரான்சுக்கும் கசப்புணர்வு அதிகரித்தது.

**உடனடிக் காரணம்** :

- ❖ 1914 ஆண்டு ஜூன் 28 நாள் ஆஸ்திரிய இளவரசர் பிரான்சிஸ் பெர்டினான்டு செர்பியயானால் கொலை செய்யப்பட்டார்.
- ❖ இக்கொலை சம்பந்தமாக ஆஸ்திரியா செர்பியாவிடம் விளக்கம் கேட்டது.
- ❖ செர்பியாவின் பதில் ஆஸ்திரியாவுக்கு திருப்தி இல்லை.
- ❖ அதனால் ஆஸ்திரியா செர்பியாவின் மீது 1914 ஆண்டு ஜூலை 28 நாள் போர் அறிவித்தது.

( அல்லது )

ஆ ) இந்திய மண் வகைகள் ஏதேனும் ஐந்திணைக் குறிப்பிட்டு , மண்ணின் பண்புகள் மற்றும் பரவல் பற்றி விவரி.

**வண்டல் மண்**

**உருவாக்கம்** : ஆறுகளின் மூலம் உருவாகும் வண்டல் மண்

**வேதியியல் பண்புகள்**: பொட்டாசியம் , சுண்ணாம்பு அதிகமாகவும் நைட்ரஜன் குறைவாகவும் உள்ளது.

**தன்மை** : மண்மண்டி , களிமண் போன்ற கலவைகளுடன் மண்ணடுக்குக் காணப்படும்.

**பரவல்** உத்திரபிரதேசம் , கங்கை பஞ்சாப் ,மேற்குவங்காளம்

**கரிசல் மண்**

**உருவாக்கம்** : தக்காணப்பகுதில் உள்ள பசால்ட் பாறைகளில் இருந்து உருவானது.

**வேதியியல் பண்புகள்**: கால்சியம் , மக்னீசியம் , இரும்பு மற்றும் மாங்கனீசு ஆகியவை காணப்படும்.

**தன்மை** : ஈரமாக இருக்கும் போது சேறாகவும் ,ஈரப்பதத்தை நீண்ட நேரம் தக்கவைத்துக்கொள்ளும்.

**பரவல்** : மகாராஷ்டிரம் ,மாளவப் பீடபூமி ,தெலுங்கான , ஆந்திரா

**செம்மண்**

**உருவாக்கம்** : கிரானைட் ,நைஸ் போன்ற பாறைகள் சிதைவடைவதால் உருவாகின்றன.

**வேதியியல் பண்புகள்**: இரும்பு மற்றும் மக்னீசியம் அதிகமாக காணப்படுகிறது.

**தன்மை** : மென்துகள்கள் இடையளவு உப்புக்கரைசல் ,சிறு வெடிப்புகளுடன் கூடிய செம்மண்

**பரவல்** : கேரளா , தமிழ்நாடு , கர்நாடகா , தக்காண பீடபூமி

**சரளை மண்**

**உருவாக்கம்** : மண் சுவரல் காரணமாக உருவாகிறது.

**வேதியியல் பண்புகள்**: இரும்பு மற்றும் அலுமினியத்தின் நீரேற்ற ஆக்சைடுகளால் உருவானது.

**தன்மை** : பொதுவாக இது ஈரப்பததைத் தக்கவைத்துக் கொள்வதில்லை.

**பரவல்** : அசாம் குன்று , ஒடிசா , மேற்குத் தொடர்ச்சி மலையின் அடிப்பகுதி

**காடு மற்றும் மலை மண்**

**உருவாக்கம்** : பௌதிக சிதைவின் காரணமாக உருவாகின்றது.

**வேதியியல் பண்புகள்**: பொட்டாஷ் , பாஸ்பரஸ் , சுண்ணாம்பு சத்துகள் குறைவாக காணப்படும்.

**தன்மை** : மென்மையான மணல் மற்றும் பாறைத்துகள்கள் கலந்து காணப்படுகிறது.

**பரவல்** : இமாச்சல் பிரதேசம் , உத்தரகாண்ட் , சிக்கிம்.

**குறிப்பு : பார்வையற்ற மாணவர்கள் வரைபட தொடர்புடைய வினாக்களுக்கு குறிப்புகள் மட்டும் எழுதவும்.**

44. (அ) கொடுக்கப்பட்டுள்ள இந்திய வரைபடத்தில் கீழ்க்காணும் இடங்களைக் குறிக்கவும் .

i. மேற்கு தொடர்ச்சிமலைகள்
ii. கங்கை ஆறு
iii. தக்காண பீட்பூமி
iv. தார் பாலைவனம்
v. வடகிழக்கு பருவக்காற்று
vi. தேயிலை விளையும் பகுதிகள்
vii. தூத்துக்குடி
viii. எவரெஸ்ட்

**( அல்லது )**

**( ஆ )** கொடுக்கப்பட்டுள்ள இந்திய வரைபடத்தில் கீழ்க்காணும் இடங்களைக் குறிக்கவும் .

i. கரிசல் மண்
ii. மன்னார் வளைகுடா
iii. மேட்டூர்அணை
iv. அகத்தியர் மலை
v. காவேரி டெல்டா
vi. இரும்பு எஃகு தொழிலகங்கள் ( ஏதேனும் ஒன்று )
vii. பாக்நீர் சந்தி
viii. இந்தியாவின் அதிக கல்வியறிவு பெற்ற மாநிலம்

www.Padasalai.Net